**Catholic Bishop's House**

**Rt Rev. S. Antonysamy** D.D., D.C.L.,
**Bishop of Palayamkottai**

1331-W, John Paul Nagar
K.T.C. Nagar,
Maharaja Nagar (Post)
Tirunelveli - 627 011
Tamil Nadu
INDIA
(Courier Address)

Post Box No. 108
Palayamkottai - 627 002
Tamil Nadu
INDIA
(Postal Address)

04.07.2021

## சுற்றறிக்கை

அன்பு அருள்தந்தையர்களே! அருள்சகோதர, சகோதரிகளே! இறைமக்களே!

கிறிஸ்துவின் பெயரில் வாழ்த்துகளும், ஆசியும்.

Covid – 19 என்னும் பெருந்தொற்றுப் பரவலால் ஆலயத்தில் மக்கள் ஒன்றாக இணைந்து நடத்தும் வழிபாட்டு நிகழ்ச்சிகள் சில மாதங்களாக தடைசெய்யப்பட்டிருந்தன. தற்போது ஜுலை 5 முதல் ஆலயங்கள் திறக்கப்பட்டு வழிபாடுகள் நடத்த அரசு அனுமதித்துள்ள நிலையில், கீழ்காணும் நடைமுறைகளை அரசு குறிப்புகளின் அடிப்படையில் செயல்படுத்த உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

1. நமது ஆலயங்களில் தினமும் வழிபாடுகள் நிகழ்த்தும்பொழுது முகக் கவசம் அணிதலும், சமூக இடைவெளியை கடைபிடித்தலும் முக்கிய நடைமுறையாகும். மேலும் கிருமி நாசினியை(sanitizer) பயன்படுத்தி ஆலயங்களையும், சுற்றுப்புறங்களையும் தூய்மையாக வைத்திருப்பது நமது நலவாழ்விற்கு நன்மை பயக்கும்.

2. திருப்பலியின் போது கரங்களிலேயே நற்கருணை வழங்கும் நடைமுறை தொடரும்.

3. திருப்பலியைத் தொடர்ந்து இறைமக்கள் குருக்களிடம் தனியாக தொட்டு ஆசீர்பெறுவதைத் தவிர்க்க வேண்டும்.

4. ஆலய வளாகங்களில் இறைமக்கள் யாரும் தங்குவதற்கு அனுமதி இல்லை.

5. ஆலய வளாகத்திலும் பொதுக்கூட்டங்கள், அசனம் மற்றும் பொதுஉணவுப் பகிர்வுகள் தவிர்க்கப்பட வேண்டும். திருவிழாக்கள் மற்றும் ஆண்டுவிழாக்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

6. ஆலயங்களில் ஒரே நேரத்தில் ஒரு திருமண நிகழ்வு மட்டுமே நடைபெற வேண்டும். அரசு வழிகாட்டுதலின்படி ஐம்பது பேர் மட்டுமே திருமண நிகழ்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

7. அடக்கச் சடங்குகளில் இருபது பேர் மட்டுமே பங்கு பெற அனுமதிக்கப்படுகிறது.

நமது நலவாழ்விற்கும் அடுத்தவர் நலனிற்கும் உதவி செய்யும் பொருட்டு மேலே காணும் நடைமுறைகளை கடைபிடித்து அனைவரும் நலவாழ்வைப் பேணிக்காக்க உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். குணமளிக்கும் இயேசு நமக்கும், எல்லா மக்களுக்கும் நல்ல சுகத்தைத் தர, தொற்று நோயை இச்சமூகத்திலிருந்து விரட்ட செபிக்கிறேன்.

ஆசீர்,

நம் ஆண்டவரில் அர்ப்பணத்துடன்,

S. Antonysamy

\+ ச. அந்தோனிசாமி
ஆயர், பாளை மறைமாவட்டம்.

Rt Rev. S. Antonysamy, D.D., D.C.
Bishop of Palayamkottai

**Palayamkottai** : Tel : **+91 462 2522042**, Mobile : **9443370160**
E-mail : bishop@palayamkottaidiocese.org; Website : www.palayamkottaidiocese.org